அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 03/2016

எனது இல : EST-7/UNIFO/06/V
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2016.08.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும்

**<u>சாரதி மற்றும் கனிஷ்ட பணியாட்தொகுதியினருக்கான சீருடை மற்றும் தையற்கூலி</u>**

மேற்படி விடயம் சம்பந்தமாக 2013.04.22 ஆந் திகதிய 05/2013 ஐக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலக பணியாளர் சேவையின் பணியாளர்களுக்கு சீருடைப் படி வழங்குவது குறித்து பல்வேறு நிறுவனங்கள் அடிக்கடி என்னிடம் வினவுகின்றனர். தாபனக் கோவையின் XXI அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் தற்போது சீருடை மற்றும் தையற்கூலி வழங்குவது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளது ஏற்பாடுகளின் பிரகாரம் அலுவலக பணியாளர் சேவையில் பின்வரும் பதவிகளில் அரசாங்க நிர்வாக சுற்றிக்கை ஏற்பாடுகளின் படி அலுவலக பணியாளர் சேவையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் பணிபுரிகின்ற அலுவலர்கள் தொடர்பாக மாத்திரம் சீருடை மற்றும் தையற்கூலி படி உரித்தாகின்றது என்பது பற்றி அறியத் தருகின்றேன்.

I. அலுவலக பணியாளர் சேவையின் II தரத்தைச் சேர்ந்த பணியாளர்கள்
II. I ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட போதிலும் II தரத்தைச் சேர்ந்த பதவியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலக பணியாளர் சேவையின் பணியாளர்கள்.
III. அமைச்சொன்றினால் ஆரச்சி பதவிப் பெயர் வழங்கப்பட்டு, அப் பதவியில் கடமையாற்றுகின்ற அலுவலக பணியாளர் சேவையின் பணியாளர்கள்.
IV. காவலாளிகள்

03. அவ்வாறே அலுவலக பணியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய, அந்தந்த தரங்களுக்குரிய பதவிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| தரம் | பதவி |
|---|---|
| விசேட தரம் | பிரதான அலுவலகப் பணியாளர் (ஆரச்சி) |
| தரம் I | தொலைபேசி இயக்குநர்<br>ஆவணப் பொறுப்பாளர்<br>புத்தகம் கட்டுநர்<br>நகல் பிரதி இயந்திர இயக்குநர்<br>நிழற்பிரதி இயந்திர இயக்குநர் |
| தரம் II | அலுவலக பணியாளர்<br>சைக்கிள் தூதுவன்<br>தூதுவன் |
| தரம் III | அலுவலகத் தொழிலாளி<br>அமதினவர் (கூட்டிச் சுத்தம் செய்பவர்)<br>பூங்கா தொழிலாளி<br>அலுவலக காவலாளி<br>துப்புறவேற்பாட்டு தொழிலாளி |

04. மேற்படி விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி, சீருடை மற்றும் தையற்கூலி பெறுவதற்கு உரித்துடைய அலுவலர்களுக்கு மாத்திரம் அத் தொகையை வழங்குவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு